மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.182/2018</u>

2025ம் ஆண்டு நவம்பர் 11ம் நாள் செவ்வாய்க்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தங்கவேல் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>11.11.2025 வா.சா.2 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. இந்த வழக்கு நடக்கும் விபரங்கள் எனக்கு யார் சொல்லி தெரியும் என்றால் ராஜேந்திரன் சொல்லி எனக்கு தெரியும். சாட்சியம் அளிக்க என்னை ராஜேந்திரன் தான் அழைத்து வந்தாரா என்றால் ஆமாம். தாவா சொத்து எந்த கிராமத்தில் உள்ளது என்றால் நிழலி கிராமத்தில் உள்ளது. எனது பூர்வீகம் எது என்றால் செட்டிபாளையம். எனக்கு தாவா சொத்திற்கு அருகில் பூமிகள் உள்ளதா என்றால் ஆமாம். தாவா சொத்திற்கு அருகில் எனக்கு பூமிகள் உள்ளது என்பதை காண்பிக்க நான் ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம்.

2. தாவா சொத்துக்களை பொருத்த ஆவணங்கள் அனைத்தும் அரசு பெயரில் தான் உள்ளது என்றால் முதலில் முத்துசாமி கவுண்டர் தான் தாவா சொத்துக்களை பார்த்து வந்தார். அதன் பிறகு ராஜேந்திரன் தான் பார்த்து வருகிறார். தாவா சொத்துக்கள் தரிசு பூமிகளாகத்தான் உள்ளது

என்றால் ஆடு, மாடுகள் மேய்கிறது. மழை பெய்தால் விவசாயம் செய்வோம். தாவா சொத்துக்களில் எந்த காலத்திலும் விவசாயம் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

3. விவசாயம் தான் செய்து வருகிறார்கள். தாவா சொத்தைப் பொறுத்து பஞ்சாயத்தில் தீர்மானம் நிறைவேற்றியுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் வாதிகள் அதைப் பற்றி என்னிடம் சொன்னார்கள தாவா சொத்துக்களை நாளது தேதி வரை யாரும் அனுபவம் செய்து வரவில்லை என்றும் தாவா சொத்துக்கள் தரிசு பூமிகளாகத்தான் இருந்து வருகிறது என்றும் சொன்னால் சரியல்ல. நான் வாதிக்கு வேண்டியவர் என்பதால் வாதிகள் சொல்லிக் கொடுத்ததன் அடிப்படையில் நான் இந்த வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2025.11.11 18:57:32 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்